I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES D.W.1
OS.NO.24/2021

**Name** : Mohan
**Father/Husband Name** : Periyasamy

**Age** : 48

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.07.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்:**03.35 p.m

**குறுக்கு விசாரணை**

நான் இந்த அலுவலகத்தில் 03.02.2023 ல் சேர்ந்தேன். இந்த விபத்து நடந்த சமயத்தில் விபத்து குறித்து நேரடியாக எதுவும் தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ. 1 மங்கலட்சமியின் கணவர் மின்சாரம் பாய்ந்து இறந்துவிட்டார் என்பதற்காக முதல் தகவல் அறிக்கை உள்ளது என்றால் சரிதான். இறுதி அறிக்கை பி.வா.சா.ஆ. 2 ல் சம்பவ இடத்தில் அறுந்து தொங்கி கொண்டிருந்த மின் கம்பியை தெரியாமல் தொட்டு மின்சாரம் தாக்கி முருகன் என்பவர் இறந்துவிட்டதாக இறுதி அறிக்கையில் சொல்லப்பட்டள்ளது என்றால் சரிதான். பி.வா,சா.ஆ 3 ல் எங்கள் நிர்வாகத்தில் இருக்கும் கடித போக்குவரத்து என்றால் சரிதான். இதில் இளநிலை பொறியாளர் ஆய்வு செய்தது போல் உள்ளது இதில் முருகன் என்பவர் இங்கு எப்படி மின் விபத்து ஏற்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியவிலலை என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இது குறித்து நான் காவல் துறையில் எந்த விதமான விளக்கம் கோரவில்லை என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ. 3 குற்ற பத்திரிக்கையை குறித்து தவறாக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு அந்த இடத்தில் மின் கம்பங்கள் யார் சரி செய்தார்கள் என்றால் மின் கம்பி அறுந்து தொங்கி கொண்டிருந்ததாக எந்த ஆவணங்களிலும் குறிப்பிடவில்லை. மேலும் சாட்சி சொல்கிறார் விபத்து நடந்த அன்றைய தினத்தில் மின் கம்பி அறுந்து தொங்கவியதாக கோப்புகளில் இல்லை. காவல் துறையில் இவ்வாறு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எங்கள் உயர் அதிகாரியால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.காவல் துறையில் சரியாக தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்றாலும் மேலும் சம்பவத்தை மறைக்க அந்த காலகட்டத்தில் இருந்த அதிகாரியை விசாரிக்காமல் சம்மந்தமில்லாமல் நான் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல, சம்பவ சமயத்தில் இருந்த அதிகாரி பணி ஓய்வில் இருப்பதால் நான் சாட்சியம் அளிக்கிறேன். வாதி கோரியப்படி அவருக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

பி.வா.சா.ஆ. 1 மற்றும் 2 முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை எங்கள் மின் துறையின் மீது இல்லை என்றால் சரிதான். காவல் துறையினர் எங்களை விசாரிக்க வில்லை எனவே நாங்கள் மேல்முறையீடு செய்ய வேண்டிய அவசியமில்லை.

**மறு குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்த சமயத்தில் நான் அங்கு பணியில் இல்லை என்றாலும் அதன் பின்னிட்டு தான் நான் பணிக்கு வந்தேன் என்றாலும் சரிதான். அந்த காலகட்டத்தில் காவல் துறையினர் மின்சார துறை அதிகாரிகளை விசாரித்தார்களா இல்லையா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**விசாரணை முடிந்த நேரம்:** 03.50 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

**(Sd/Tmt.G.Santhi)**
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.